# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அனுப்புநர்
திரு.K.பவுண்ராஜ், எம்.எஸ்சி.,பி..எட்.,
ஆணையாளர் (கூ. பொ)
நகராட்சி அலுவலகம்,
கடையநல்லூர்.

பெறுநர்.
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
திருநெல்வேலி.

ந.க..எண். 1767/2012/இ1 நாள்: 15.03. 2018

அய்யா,

பொருள்:- நகர்மன்றம் –கடையநல்லூர் நகராட்சி – 28.02.2018 அன்று தனி அலுவலரால் சாதாரண நகர்மன்ற கூட்டம் நடத்தப்பட்டது– நிறைவேற்றிய தீர்மானத்தின் விபரங்கள் தெரிவிப்பது– அனுப்புவது – சார்பு.

பார்வை. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.2127/2016/அ3, நாள்.23.02.2017.

*****

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சி தனி அலுவலரால் 28.02.2018ம் தேதியன்று நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெற்றது. மேற்காணும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விபரங்கள் இத்துடன் பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

| வ.எண் | நகராட்சியின் பெயர் | பொருள் எண் | நகர்மன்றத் தீர்மான எண் | நாள் |
|---|---|---|---|---|
| 1 | கடையநல்லூர் | 1 | 57 | 28.02.2018 |
| 2 | | 2 | 58 | 28.02.2018 |
| 3 | | 3 | 59 | 28.02.2018 |
| 4 | | 4 | 60 | 28.02.2018 |
| 5 | | 5 | 61 | 28.02.2018 |
| 6 | | 6 | 62 | 28.02.2018 |
| 7 | | 7 | 63 | 28.02.2018 |
| 8 | | 8 | 64 | 28.02.2018 |
| 9 | | 9 | 65 | 28.02.2018 |
| 10 | | 10 | 66 | 28.02.2018 |
| 11 | | 11 | 67 | 28.02.2018 |
| 12 | | 12 | 68 | 28.02.2018 |
| 13 | | 13 | 69 | 28.02.2018 |
| 14 | | 14 | 70 | 28.02.2018 |
| 15 | | 15 | 71 | 28.02.2018 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | | 16 | 72 | 28.02.2018 |
| 17 | | 17 | 73 | 28.02.2018 |
| 18 | | 18 | 74 | 28.02.2018 |
| 19 | | 19 | 75 | 28.02.2018 |
| 20 | | 20 | 76 | 28.02.2018 |
| 21 | | 21 | 77 | 28.02.2018 |
| 22 | | 22 | 78 | 28.02.2018 |

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.

**இணைப்பு.**
28.02.2018ம் தேதியன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில்
நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விபர எடு குறிப்பு நகல்

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.

**<u>கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.</u>**

**<u>பொருள் எண்– 01</u>**

இந்நகராட்சி பகுதியில் கருப்பாநதி பெரியாற்றுப் படுகையில் குடிநீர் பம்பிங செய்யப்பட்டு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்காணும் விநியோகம் செய்யும் குடிநீரில் குளோரின் கேஸ் மூலம் குளோரினேசன் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் குளோரினேசன் செய்யும் இயந்திரத்தில் பழுது ஏற்பட்டு இயஙகாத நிலை ஏற்படுகிறது. தற்பொழுது இந்நகராட்சி பகுதி முழுவதும் டெஙகு காய்ச்சல் பரவி வருவதால் இந்நகராட்சி மூலம் நகருக்கு விநியோகம் செய்யும் குடிநீரில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தேவை ஏற்படும்போது பயன்படுத்துவதற்காக பொதுமக்களின் நலனை கருத்திற் கொண்டு 0.1114 கடையநல்லூர் கூட்டுறவு பண்டக சாலையிலிருந்து நேரடியாக 1000கிலோ பிளிச்சிங பவுடர் வாஙகவும் அதற்கான செலவுத் தொகைக்கும் அஙகீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4043 /2014/இ2)**

**<u>தீர்மானம் எண். 57</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 02</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 30 செய்யது தெரு, புளியமுக்கு தெரு பேட்டை தென்வடல் தெரு மற்றும் நடுத்தெரு ஆகியவற்றில் குடிநீர் விநியோகத்தின் போது புதிய குடிநீர் இணைப்புகளில் சீரான முறையில் குடிநீர் விநியோகம் கிடைக்கவில்லை. மேலும் வார்டு எண்.31, 29 காதர் மைதின் பள்ளிவாசல் தெரு, ஆகியவற்றில் உள்ள புதிய பகிர்மான குழாய்களில் அடைப்புகள் ஏற்பட்டு இருப்பதால் அதனை சரி செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேலும் நத்தடு பள்ளிவாசல் தெருவிலிருந்து அழகு மகுதணன் தென்வடல் தெரு பகிர்மான குழாயுடன் இணைப்பு செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொது மக்களின் நலனினை கருத்திற்கொண்டும் ரூ.125000/– உத்தேச மதிப்பீட்டில் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.K.S.அப்துல் மாலிக் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத் தொகைக்கும் அஙகீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டும் மற்றும் பொது மக்களின் நலனினைக் கருத்திற்கொண்டும் இந்நகராட்சி தனி அலுவலர் 19.02.2018 அன்று முன் அனுமதி வழஙகியுள்ளதன் அடிப்படையில் வேலை உத்திரவு வழஙக நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அஙகீகாரத்திற்காக.

**(ந.க.எண். 519 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 58</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 03</u>**

இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 32 ரகுமானியாபுரம் தெற்கு தெரு கீழ் கடைசி பகுதியில் குடிநீர் விநியோகத்தின் போது சுமார் 30 வீடுகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பதிக்கப்பட்ட புதிய குடிநீர் இணைப்பு குழாயில் சீரான குடிநீர் கிடைக்கப் பெறவில்லை. ஆகவே மேற்காணும் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் சீராக கிடைக்க தேசிய நெடுஞ்சாலையின் மேல்பகுதி வண்ணமுத்து தெருவிலிருந்து ரகுமானியாபுரம் வடக்கு தெரு வரை உள்ள 8’’D.I பைப்பிலிருந்து ரகுமானியாபுரம் தெற்கு தெருவரை சுமார் 90.00 மீட்டர் நீளத்திற்கு 4’’PVC பைப்லைன் அமைத்து 4’’ வால்வு பொருத்தி சீரான குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஆகவே குடிநீர் பணியின்

அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொது மக்களின் நலனினை கருத்திற்கொண்டும் ரூ.100000/– உத்தேச மதிப்பீட்டில் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.K.S.அப்துல் மாலிக் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத் தொகைக்கும் அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொது மக்களின் நலனினைக் கருத்திற்கொண்டும் இந்நகராட்சி தனி அலுவலர் 23.02.2018 அன்று முன் அனுமதி வழஙகியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு வேலை உத்திரவு வேலை உத்திரவு வழஙக நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 519 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 59</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 04</u>**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனம் பேரறிஞர் அண்ணா தினசரி சந்தையில் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தின் மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2018 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.342 நாள்.23.11.2017ல் மேற்படி இனத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகைக்குவிடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இவ்வினத்திற்கு 19.01.2018 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவிபரப்படி வரப்பெற்ற ஏலக்கேள்விகள் / ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு.P.கணேசன்,<br>த/பெ.K.புணமாலை,<br>3/29, மாதாங்கோவில் தெற்கு தெரு,<br>மேலக்கடையநல்லூர். | ரூ.500000/– | ரூ.725000/– | இல்லை |
| 2. | திரு.சு.கிருஷ்ணசாமி,<br>61/207, சுடலைமாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.500000/– | இல்லை | இல்லை |
| 3. | திரு.த.முருகன்,<br>18/2, கிராமசாவடி தெரு,<br>புளியங்குடி. | ரூ.500000/– | இல்லை | இல்லை |
| 4. | திரு.R.கார்த்தீஸ்வரன்,<br>S/o, சி.ராமசாமி,<br>16B, செவல் விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.500000/– | ரூ.721000/– | ரூ.911600/– |

கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 4ல் குறிப்பிட்டுள்ள திரு.R.கார்த்தீஸ்வரன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ.911600/– அதிகமாக உள்ளது. மேலும் இவ்ஒப்பந்தப்புள்ளித் தொகையானது. 2015–16ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.610000/–, 2016–17ம் ஆண்டின் குத்தகை தொகைரூ.640500/– மற்றும் 2017–18 ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.672525/– விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை (610000+640500+672525 =1923025/3=641008)

ரூ.641008/—ஐ விட ரூ.270592/— கூடுதலாக உள்ளது. எனவே அன்னாரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அன்னாருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்கலாம்.

**( ந.க.எண்.4003/2017/அ3)**

**<u>தீர்மானம் எண். 60</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்— 05</u>**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனம் இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடறுப்பு மனையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தின் மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2018 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.342 நாள்.23.11.2017ல் மேற்படி இனத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகைக்குவிடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இவ்வினத்திற்கு 19.01.2018 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவிபரப்படி வரப்பெற்ற ஏலக்கேள்விகள் / ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு. எம்.கே. இசக்கிப்பாண்டியன்,<br>த/பெ. கருப்பன்,<br>28/6, டாக்டர். அம்பேத்கார் தெரு,<br>கடையநல்லூர். | ரூ.200000/— | ரூ.251000/— | இல்லை |
| 2. | திரு.APMA. காஜா,<br>த/பெ. அப்துல் அஜீஸ்,<br>265, மெயின் ரோடு,<br>கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.200000/— | ரூ.250000/— | இல்லை |
| 3. | திரு.S.K.முத்துக்கிருஷ்ணன்,<br>156, மேற்கு மலம்பாட்டை தெரு,<br>கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.200000/— | ரூ.212000/— | இல்லை |
| 4. | திரு. ஏ. பொன்னுச்சாமி,<br>62/137, நாட்டாண்மை தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.200000/— | ரூ.201000/— | இல்லை |

மேலும் மேற்கண்ட கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்விகளில் வரிசை எண். 1ல் குறிப்பிட்டுள்ள திரு. எம்.கே. இசக்கிப்பாண்டியன், என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.251000/— அதிகமாக உள்ளது. மேலும் இவ்ஏலக் கேள்வி தொகையானது. 2015—16ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.160000/—, 2016—17ம் ஆண்டின் குத்தகை தொகைரூ.168000/— மற்றும் 2017—18 ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.176400/— விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.(160000+168000+176400=504400/3=168133) ரூ.168133/—ஐ விட ரூ.82867/— கூடுதலாக உள்ளது. எனவே அன்னாரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியை ஏற்று அன்னாருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்கலாம்.

**(ந.க.எண்.4003/2017/அ3)**

**<u>தீர்மானம் எண். 61</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 06**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனம் இந்நகராட்சிக்கு சொந்தமான மேலக்கடையநல்லூர் பண்பொழி ரோடு கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தின் மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2018 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.342 நாள்.23.11.2017ல் மேற்படி இனத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகைக்குவிடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இவ்வினத்திற்கு 19.01.2018 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஏலக்கேள்விகள் / ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு.V.சண்முக சுந்தரம், த/பெ. வேலு, 23, பள்ளிக்கூடத் தென்வடல் தெரு, மேலக்கடையநல்லூர், கடையநல்லூர். | ரூ.150000/– | ரூ.197000/– | இல்லை |
| 2. | திரு.T. சங்கர், 23A, வேதக்கோவில் தெரு, மேலக்கடையநல்லூர், கடையநல்லூர். | ரூ.150000/– | ரூ.200000/– | இல்லை |
| 3. | திரு.S. தாமரைக்கண்ணன், நடுத்தெரு, மேலக்கடையநல்லூர், கடையநல்லூர். | ரூ.150000/– | ரூ.198000/– | இல்லை |
| 4. | திரு. ஏ. பொன்னுச்சாமி, 62/137, நாட்டாண்மை தெரு, முத்துக்கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | ரூ.150000/– | ரூ.196000/– | இல்லை |

மேலும் மேற்கண்ட கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்விகளில் வரிசை எண். 2ல் குறிப்பிட்டுள்ள திரு.T. சங்கர், என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.200000/– அதிகமாக உள்ளது. மேலும் இவ்ஏலக் கேள்வி தொகையானது. 2015–16ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.157200/–, 2016–17ம் ஆண்டின் குத்தகை தொகைரூ.165060/– மற்றும் 2017–18 ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.173313/– விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.(157200+165060+173313=495573/3=165191) ரூ.165191/–ஐ விட ரூ.34809/– கூடுதலாக உள்ளது. எனவே அன்னாரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியை ஏற்று அன்னாருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்கலாம்.

**(ந.க.எண்.4003/2017/அ3)**

**தீர்மானம் எண். 62**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 07**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனம் இந்நகராட்சி பேரூந்து நிலையத்திற்குள் ஒரு நாளைக்கு வந்து நின்று செல்லும் பேரூந்துகளிடம் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தின் மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2018 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.342 நாள்.23.11.2017ல் மேற்படி இனத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகைக்குவிடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி

இவ்வினத்திற்கு 19.01.2018 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஏலக்கேள்விகள் / ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு.K.M. முகைதீன் பிச்சை,<br>த/பெ. முகம்மது இப்ராஹிம்,<br>263BA 21/1, ரகுமானியாபுரம் 9 வது தெரு,<br>கடையநல்லூர். | ரூ.300000/– | ரூ.371000/– | இல்லை |
| 2. | திரு.P. முகம்மது இஸ்மாயில்<br>த/பெ. பீர் முகம்மது,<br>366/74, SKP தெரு,<br>தென்காசி. | ரூ.300000/– | ரூ.375000/– | இல்லை |

மேலும் மேற்கண்ட கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்விகளில் வரிசை எண். 2ல் குறிப்பிட்டுள்ள திரு.P. முகம்மது இஸ்மாயில், என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.375000/– அதிகமாக உள்ளது. மேலும் இவ்ஏலக் கேள்வி தொகையானது. 2015–16ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.310000/–, 2016–17ம் ஆண்டின் குத்தகை தொகைரூ.325500/– மற்றும் 2017–18 ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.341775/– விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.(310000+325500+341775=977275/3=325758) ரூ.325758/–ஐ விட ரூ.49242/– கூடுதலாக உள்ளது. எனவே அன்னாரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியை ஏற்று அன்னாருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்கலாம்.

(ந.க.எண்.4003/2017/அ3)

**<u>தீர்மானம் எண். 63</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 08</u>**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனம் இந்நகராட்சி தலைமை நிரேற்று நிலையம் இடைநிலை நீரூந்து நிலையம் மற்றும் நகராட்சி அலுவலகத்திலுள்ள தென்னைமரங்களின் மேல்மகசூல் அனுபவிக்கும் உரிமத்தின் மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2018 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.342 நாள்.23.11.2017ல் மேற்படி இனத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகைக்குவிடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இவ்வினத்திற்கு 19.01.2018 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஏலக்கேள்விகள் / ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு.V.சண்முக சுந்தரம்,<br>த/பெ. வேலு,<br>23, பள்ளிக்கூடத் தென்வடல் தெரு,<br>மேலக்கடையநல்லூர்,<br>கடையநல்லூர். | ரூ.10000/– | ரூ.26000/– | இல்லை |
| 2. | திரு.S. தாமரைக்கண்ணன்,<br>நடுத்தெரு,<br>மேலக்கடையநல்லூர்,<br>கடையநல்லூர். | ரூ.10000/– | இல்லை | இல்லை |
| 3. | திரு.R.கார்த்தீஸ்வரன்,<br>S/o, சி.ராமசாமி,<br>16B, செவல் விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.10000/– | ரூ.27000/– | ரூ.30000/– |

கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 3ல் குறிப்பிட்டுள்ள திரு.R.கார்த்தீஸ்வரன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ.30000/– அதிகமாக உள்ளது. மேலும் இவ்ஒப்பந்தப்புள்ளித் தொகையானது. 2015–16ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.20007/–, 2016–17ம் ஆண்டின் குத்தகை தொகைரூ.21010/– மற்றும் 2017–18 ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.22061/– விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை (20007+21010+22061 =63078/3=21026) ரூ.21026/–ஐ விட ரூ.8974/– கூடுதலாக உள்ளது. எனவே அன்னாரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அன்னாருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்கலாம்.

ந.க.எண்.4003/2017/அ3

**<u>தீர்மானம் எண். 64</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 09</u>**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனம் இந்நகராட்சி பேரூந்து நிலையத்திலுள்ள இருசக்கரவாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தின் மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2018 உடன் முடிவடைகிறது. மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.342 நாள்.23.11.2017ல் மேற்படி இனத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகைக்குவிடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இவ்வினத்திற்கு 23.02.2018 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஏலக்கேள்விகள் / ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு.K.M. முகைதீன் பிச்சை,<br>த/பெ. முகம்மது இப்ராஹிம்,<br>263BA 21/1, ரகுமானியாபுரம் 9 வது தெரு,<br>கடையநல்லூர். | ரூ.250000/– | இல்லை | ரூ.246200/– |
| 2. | திரு.K.ராஜேஸ்<br>61/207, சுடலைமாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.250000/– | இல்லை | ரூ.244440/– |

மேலும் மேற்கண்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2ல் குறிப்பிட்டுள்ள திரு.K.M. முகைதீன் பிச்சை, என்பவரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.246200/– அதிகமாக உள்ளது. மேலும் இவ் ஒப்பந்தப்புள்ளித் தொகையானது. 2015–16ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.221000/–, 2016–17ம் ஆண்டின் குத்தகை தொகைரூ.232050/– மற்றும் 2017–18 ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.243653–விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.(221000+232050+243653=696703/3=232234) ரூ.232234/–ஐ விட ரூ.13966/– கூடுதலாக உள்ளது. எனவே திரு.K.M. முகைதீன் பிச்சை என்பவரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அன்னாருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்கலாம். மேலும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட குத்தகைதாரரிடமிருந்து 2018–2019ம் ஆண்டிற்கான குத்தகை தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதற்கும் இசைவு வழங்கலாம்.

(ந.க.எண்.4003/2017/அ3)

**<u>தீர்மானம் எண். 65</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 10**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனம் அண்ணாமலை பொய்கையில் மீன்பிடிக்கும் உரிமத்திற்கு தீர்மானம் எண்.342 நாள்.23.11.2017ல் 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகைக்குவிடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இவ்வினத்திற்கு 23.02.2018 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஏலக்கேள்விகள் / ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு.சு.மாடசாமி,<br>9சி.கண்ணார் தெரு,<br>மேலக்கடையநல்லூர் ,கடையநல்லூர். | ரூ.15000/– | இல்லை | ரூ.12000/– |
| 2. | திரு.N.பாபுராஜ்,<br>24/எப்.4 பள்ளிக்கூடம் தெற்கு தெரு,<br>மேலக்கடையநல்லூர்<br>கடையநல்லூர். | ரூ.15000/– | இல்லை | ரூ.11000/– |

மேலும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் குறிப்பிட்டுள்ள திரு.சு.மாடசாமி, என்பவரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.12000/– அதிகமாக உள்ளது. மேலும் இவ்வினத்திற்கு 2015–16 , 2016–17 மற்றும் 2017–18 ம் ஆண்டில் 11 தடவைகள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும் யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. எனவே நகராட்சியின் வருவாயினை கருத்திற் கொண்டு அன்னாரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அன்னாருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்கலாம். மேலும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட குத்தகைதாரரிடமிருந்து 2018–19 மற்றும் 2019–2020ம் ஆண்டிற்கான குத்தகை தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதற்கும் இசைவு வழங்கலாம்.

ந.க.எண்.4003/2017/அ3

***தீர்மானம் எண். 66***

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 11**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனம் தெப்பக்குளத்தில் மீன்பிடிக்கும் உரிமத்திற்கு தீர்மானம் எண்.342 நாள்.23.11.2017ல் 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகைக்குவிடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இவ்வினத்திற்கு 23.02.2018 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஏலக்கேள்விகள் / ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு.சு.மாடசாமி,<br>9சி.கண்ணார் தெரு,<br>மேலக்கடையநல்லூர் ,<br>கடையநல்லூர். | ரூ.5000/– | இல்லை | ரூ.5500/– |
| 2. | திரு.N.பாபுராஜ்,<br>24/எப்.4 பள்ளிக்கூடம் தெற்கு தெரு,<br>மேலக்கடையநல்லூர்<br>கடையநல்லூர். | ரூ.5000/– | இல்லை | ரூ.5000/– |

மேலும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் குறிப்பிட்டுள்ள திரு.சு.மாடசாமி, என்பவரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.5500/– அதிகமாக உள்ளது. மேலும் இவ்வினத்திற்கு 2015–16 , 2016–17 மற்றும் 2017–18 ம் ஆண்டில் 11 தடவைகள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும் யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. எனவே நகராட்சியின் வருவாயினை கருத்திற் கொண்டு அன்னாரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அன்னாருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்கலாம். மேலும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட குத்தகைதாரரிடமிருந்து 2018–19 மற்றும் 2019–2020ம் ஆண்டிற்கான குத்தகை தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதற்கும் இசைவு வழங்கலாம்.

ந.க.எண்.4003/2017/அ3

**<u>தீர்மானம் எண். 67</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 12</u>**

இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள கடைஎண் 2க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.345 நாள்.23.11.2017ல் 01.04.2018 முதல் 31.03.2021 வரை வாடகைக்கு விடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி கடைக்கு 19.01.2018 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகை ரூ. மாதவாடகை | ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு. எம்.திருமலைச்சாமி,<br>6சி/45 ஏ3 இந்திரா நகர் 2ம் தெரு ,<br>மேலக்கடையநல்லூர், கடையநல்லூர். | ரூ.150000/– | ரூ.5100/– | இல்லை |
| 2. | திரு. சி.முருகன்,<br>த/பெ. சிவன்,<br>30, பள்ளிக்கூடம் தென்வடல் தெரு,<br>மேலக்கடையநல்லூர், கடையநல்லூர். | ரூ.150000/– | ரூ.5075/– | இல்லை |

மேலும் மேற்கண்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண். 1ல் குறிப்பிட்டுள்ள திரு.எம்.திருமலைச்சாமி, என்பவரின் உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ.5100/– அதிகமாக உள்ளது. மேலும் மேற்படி கடைக்கு 23.02.2018 ம்தேதி அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி கடைக்கு யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேலும் இதே வரிசையில் 9 ஆண்டுகள் நிறைவடைந்த கடைகளுக்கு ரூ.4800/ – மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே திரு.எம்.திருமலைச்சாமி என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வி தொகை பேருந்து நிலையத்தில் 9 ஆண்டுகள் நிறைவடைந்த கடைகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகைத் தொகை ரூ.4800/– ஐ விட கூடுதலாக உள்ளதால் அன்னாரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை ஏற்று அன்னாருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை வாடகை உரிமம் வழங்கலாம். மேலும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட குத்தகைதாரரிடமிருந்து ஒருவருட வாடகை கூடுதல் வைப்புத்தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதற்கும் இசைவு வழங்கலாம்.

ந.க.எண்.4003/2017/அ3

**<u>தீர்மானம் எண். 68</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 13**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனம் நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தின் மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2018 உடன் முடிவடைகிறது. மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.342 நாள்.23.11.2017ல் மேற்படி இனத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகைக்குவிடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இவ்வினத்திற்கு 19.01.2018 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஏலக்கேள்விகள் / ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு.வி.சண்முக சுந்தரம்,<br>த/பெ வேலு,<br>23. பள்ளிக்கூடம் தெரு.<br>மேலக்கடையநல்லூர். | ரூ.200000/– | ரூ.261000/– | இல்லை |
| 2. | திரு.K.M. முகைதீன் பிச்சை,<br>த/பெ. முகம்மது இப்ராஹிம்,<br>263BA 21/1, ரகுமானியாபுரம் 9 வது தெரு,<br>கடையநல்லூர். | ரூ.200000/– | ரூ.262000/– | இல்லை |
| 3. | திரு.P. முகம்மது இஸ்மாயில்<br>த/பெ. பீர் முகம்மது,<br>366/74, SKP தெரு,<br>தென்காசி. | ரூ.200000/– | இல்லை | ரூ.313683/– |
| 4. | திரு. பா. பழனிக்குமார்,<br>த/பெ பாலசுப்பிரமணி,<br>7 வது வார்டு எம்.ஜி.ஆர் நகர்,<br>உசிலம்பட்டி. | ரூ.200000/– | இல்லை | இல்லை |

கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 3ல் குறிப்பிட்டுள்ள திரு.P. முகம்மது இஸ்மாயில் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகைரூ.313683/–கூடுதலாக உள்ளது. இந்நிலையில் வரிசை எண் 4ல் குறிப்பிட்டுள்ள திரு. பா. பழனிக்குமார்,என்பவர் 22.01.2018அன்று ரூ.315000/– வங்கி வரைவோலையாக செலுத்தி மறு ஏலம் கோர விண்ணப்பித்துள்ளார். அதன் பேரில் 23.02.2018 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.P. முகம்மது இஸ்மாயில்<br>த/பெ. பீர் முகம்மது,<br>366/74, SKP தெரு,<br>தென்காசி. | ரூ.200000/– | இல்லை | ரூ.456000/– |
| 2 | திரு. பா. பழனிக்குமார்,<br>த/பெ பாலசுப்பிரமணி,<br>7 வது வார்டு எம்.ஜி.ஆர் நகர்,<br>உசிலம்பட்டி. | ரூ.200000/– | இல்லை | ரூ.458888/– |

மேலும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2ல் குறிப்பிட்டுள்ள திரு.பா.பழனிக்குமார், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.458888/–கூடுதலாக உள்ளது. இத்தொகை . 2015–16ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.165000/–, 2016–17ம் ஆண்டின் குத்தகை தொகைரூ.173250/– மற்றும் 2017–18 ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.181913/– விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை (165000+173250+181913=520163/3=173388) ரூ.173388/–ஐ விட ரூ.285500/– கூடுதலாக உள்ளது. எனவே திரு. பா. பழனிக்குமார் என்பரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அன்னாருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்கலாம். மேலும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட குத்தகைதாரரிடமிருந்து 2018–19ம் ஆண்டிற்கான குத்தகை தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதற்கும் இசைவு வழங்கலாம்.

ந.க.எண்.4003/2017/அ3

**தீர்மானம் எண். 69**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 14**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனம் தந்தை பெரியார் வாரச்சந்தையில் திறந்தவெளியில் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தின் மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2018 உடன் முடிவடைகிறது. மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.342 மற்றும் 343 நாள்.23.11.2017 ல் மேற்படி வாரச்சந்தையில் வாரச்சந்தை நடைபெறும் நாள் மற்றும் தினசரி வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்துடன் சேர்த்து 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகைக்குவிடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இவ்வினத்திற்கு 19.01.2018 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவிபரப்படி கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் / ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு.P.கணேசன்,<br>த/பெ.K.புணமாலை,<br>3/29, மாதாங்கோவில் தெற்கு தெரு,<br>மேலக்கடையநல்லூர். | ரூ.250000/– | ரூ.280000/– | இல்லை |
| 2. | திரு.சு.கிருஷ்ணசாமி,<br>61/207, சுடலைமாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.250000/– | ரூ.276000/– | இல்லை |
| 3. | திரு.K.ராஜேஸ்<br>61/207, சுடலைமாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.250000/– | ரூ.278000/– | இல்லை |
| 4. | திரு.R.கார்த்தீஸ்வரன்,<br>S/o, சி.ராமசாமி,<br>16B, செவல் விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.250000/– | ரூ.200500/– | ரூ.260011/ |

கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் குறிப்பிட்டுள்ள திரு. திரு.P.கணேசன்,என்பவரின் ஏலக்கேள்வி தொகைரூ.280000/–கூடுதலாக உள்ளது. இந்நிலையில் வரிசை எண் 4ல் குறிப்பிட்டுள்ள திரு.R.கார்த்தீஸ்வரன் என்பவர் 22.01.2018அன்று ரூ.281000/– வங்கி வரைவோலையாக செலுத்தி மறு ஏலம் கோர விண்ணப்பித்துள்ளார் . அதன் பேரில் மேற்படி இனத்திற்கு 23.02.2018 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு.P.கணேசன்,<br>த/பெ.K.புணமாலை,<br>3/29, மாதாங்கோவில் தெற்கு தெரு,<br>மேலக்கடையநல்லூர். | ரூ.250000/– | இல்லை | இல்லை |
| 2 | திரு.K.ராஜேஸ்<br>. 61/207, சுடலைமாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.250000/– | ரூ.282500/– | இல்லை |
| 3 | திரு.R.கார்த்தீஸ்வரன்,<br>S/o, சி.ராமசாமி,<br>16B, செவல் விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.250000/– | ரூ.283000/– | இல்லை |

மேலும் மேற்கண்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண். 3ல்குறிப்பிட்டுள்ள திரு.R.கார்த்தீஸ்வரன், என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.283000/– கூடுதலாக உள்ளது. இத்தொகை . 2015–16ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.140000/–, 2016–17ம் ஆண்டின் குத்தகை தொகைரூ.147000/– மற்றும் 2017–18 ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.154350/– விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரித் தொகை (140000+147000+154350=441350/3=147116) ரூ.147116/–ஐ விட ரூ.135884/– கூடுதலாக உள்ளது. எனவே அன்னாரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியினை ஏற்று திரு.R.கார்த்தீஸ்வரன் என்பவருக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்கலாம். மேலும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட குத்தகைதாரரிடமிருந்து 2018–19ம் ஆண்டிற்கான குத்தகை தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதற்கும் இசைவு வழங்கலாம்.

ந.க.எண்.4003/2017/அ3

**<u>தீர்மானம் எண். 70</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 15</u>**

கடையநல்லூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 29.09.2017ல் மரணமடைந்த திரு.த.சமுத்திரம் துப்புரவு பணியாளர் எண்.85 என்பவரின் சிறப்பு சேமநல நிதி சந்தா மற்றும் அதற்கான வட்டிதொகையினை தனக்கு வழங்க கேட்டு அன்னாரின் வாரிசுதாரான திருமதி. இசக்கியம்மாள் (மகள்), கோரியுள்ளார்.

எனவே திரு.த.சமுத்திரம்(லேட்) துப்புரவு பணியாளர் என்பவரின் உரிய சிறப்பு சேமநலநிதி தொகை ரூ.2960/– மற்றும் அதற்கான வட்டித் தொகை ரூ.5730/– ஆகமொத்தம் ரூ.8690/–யை அன்னாரின் மகள் திருமதி.இசக்கியம்மாள் என்பவருக்கு வழங்க இசைவு வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 4778 /2018/D1)**

**தீர்மானம் எண். 71**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்–16**

கடையநல்லூர் நகராட்சியில் குடிநீர் திறப்பாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.03.2018ல் ஓய்வு பெற்றுள்ள திரு.மு.பாலையா என்பவரின் சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2960/– , அதற்கான வட்டித் தொகை ரூ.4463/– மற்றும் அரசின் பங்களிப்புத் தொகை ரூ.10,000/– ஆக மொத்தம் ரூ.17423/–(ரூபாய் பதினெழாயிரத்தி நானூற்றி இருபத்தி மூன்று மட்டும்) வழங்க இசைவு வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 411 /2018/D1)**

**தீர்மானம் எண். 72**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்–17**

இந்நகராட்சி பேருந்துநிலையத்திலுள்ள கீழ்க்கண்ட கடைகள் குத்தகைக்கு விடப்பட்டு 31.03.2018 உடன் முடிவடைகிறது. எனவே மேற்படி கடைகளுக்கு கீழ்க்கண்டவாறு புதுப்பித்தல் கட்டணம் பெற்று 01.04.2018 முதல் 31.03.2021 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து உத்திரவு வழங்க அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| கடை எண் | பெயர் மற்றும் முகவரி | ஏற்கனவே உள்ள மாத வாடகைத் தொகைரூ. | தற்போது 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டுள்ள மாத வாடகை ரூ. | புதுப்பித்தல் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 10 | திரு.எஸ்.பரமபூல் துரை,<br>18பி. தெற்கு ரதவீதி,<br>மேலக்கடையநல்லூர்.<br>கடையநல்லூர். | 1555/– | ரூ.1800/– | ரூ.1000/– |
| 11 | திரு.எஸ்.ஜெயமாலன்,<br>18பி. தெற்கு ரதவீதி,<br>மேலக்கடையநல்லூர்.<br>கடையநல்லூர். | 1695/– | ரூ.1950/– | ரூ.1000/ |
| 13 | திரு.ஏ.பி.எம்.ஏ.காஜா,<br>ஒப்பந்ததாரர்,<br>80,மெயின் ரோடு,<br>கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | 1725/– | ரூ.1990/– | ரூ.1000/ |
| 14 | திரு.எஸ்.ஜெயமாலன்,<br>18பி. தெற்கு ரதவீதி,<br>மேலக்கடையநல்லூர்.<br>கடையநல்லூர். | 1760/– | ரூ.2030/– | ரூ.1000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| தென் பக்க கடை எண்.1 | திருமதி.வே.குலசேகரத்தம்மாள், 16இ/5.திலகர் தெரு, கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | 2760/– | ரூ.3175/ | ரூ.1000/ |
| 25 | திருமதி உஷா ராணி,தலைவி, தாமரை பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுச்சங்கம், பேருந்து நிலையம், கடையநல்லூர். | 2500/– | ரூ.2875/ | ரூ.1000/ |

**(ந.க.எண்.3344/2014/அ3)**

**தீர்மானம் எண். 73**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்–18**

இந்நகராட்சி பேருந்து நிலையத்தின் முதல் தளம் கடை எண்.16க்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.3344/2014/அ3, நாள்.06.04.2015ன்படி திரு.வே. ராஜா, 4A கிருஷ்ணன் கோவில் தெரு, கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் என்பவருக்கு 01.04.2015 முதல் 31.03.2018 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட கடையின் உரிமைதாரர் திரு.ராஜா என்பவர் தற்போது உடல்நிலை சரியில்லாததால் மேற்படி கடையினை தொடர்ந்து நடத்த இயலாமல் போவதால் மேற்படி கடையினை திரும்ப ஒப்படைப்பு செய்வதாகவும், தான் இக்கடைக்காக 2014–15ம் ஆண்டில் இக்கடைக்காக செலுத்தியுள்ள ஏல முன் வைப்புத் தொகை ரூ.150000/– திரும்ப வழங்குமாறு கேட்டுள்ளார். மேலும் இக்கடையின் மூன்றாண்டு உரிமம் 31.03.2018 உடன் முடிவடைவதால் இக்கடைக்கு திரு.வே.ராஜா என்பவருக்கு வழங்கிய உரிமத்தினை 31.03.2018 உடன் ரத்து செய்து 01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டுகளுக்கு மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும், அன்னார் இக்கடைக்காக செலுத்தப்பட்ட ஏல முன் வைப்புத் தொகை ரூ.150000/–ஐ திரும்ப வழங்க அங்கீகாரத்திற்காக.

மேலும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் ஏல நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்..400/2018/அ3)**

**தீர்மானம் எண். 74**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்–19**

கடையநல்லூர் நகராட்சியில் அட்டவணையில் கண்ட இந்நகராட்சி தனிஅலுவலர் முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு 15.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நகர்மன்றத் தீர்மானம் எண்/ நாள் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **பொது நிதி –2017–18** | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிப்பகுதி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் தீயணைப்பு நிலையம் அருகிலுள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி மற்றும் இந்நகராட்சி வாரச்சந்தை வளாகத்திலுள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு புதிய Chlorination Plant நிறுவுதல் பணிக்கு. | இந்நகராட்சி தனிஅலுவலரின் முன்அனுமதி நாள்.31.01.2018 | ரூ.8.81/– | Excellent Chloro Systems<br>Shri sathya dyes and chemicals | 0.50% குறைவு<br>0.23% குறைவு |
| 2. | இந்நகராட்சிப்பகுதி கிருஷ்ணாபுரம் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி (மெயின்) 4.50 இலட்சம் லிட்டர் மற்றும் மாவடிக்கால் மந்தை குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு புதிய Chlorination Plant நிறுவுதல் பணிக்கு. | இந்நகராட்சி தனிஅலுவலரின் முன்அனுமதி நாள்.31.01.2018 | ரூ.8.81/– | Excellent Chloro Systems<br>Shri sathya dyes and chemicals | 0.50% குறைவு<br>0.23% குறைவு |
| 3. | இந்நகராட்சிப்பகுதி இடைநிலை நீரூந்து நிலையம் (Booster station) மற்றும் மலம்பாட்டை ரோட்டிலுள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு புதிய Chlorination Plant நிறுவுதல் பணிக்கு. | இந்நகராட்சி தனிஅலுவலரின் முன்அனுமதி நாள்.31.01.2018 | ரூ.8.81/– | Excellent Chloro Systems<br>Shri sathya dyes and chemicals | 0.50% குறைவு<br>0.23% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த சதவீதத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யலாம்.

குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் 15.02.2018 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்காணும் பணிகளுக்கு வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டதற்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.871/2017/இ1)**

**<u>தீர்மானம் எண். 75</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்–20</u>

இந்நகராட்சிப் பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு 2017-2018 ஆம் ஆண்டிற்கு தேவையான தளவாட சாமான்கள் ரூ.9.50/-இலட்சம் (ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதீப்பிட்டில் வாங்குவதற்கு தனி அலுவலர் அவர்கள் 02.02.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் 14.02.2018 அன்று தகுதிப்பபெற்ற நிறுவனங்களிடம் குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| **வ.எண்** | **தளவாட சாமான்கள் விபரம்** | **ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம்** | |
|---|---|---|---|
| | | **பாண்டியன் ஏஜென்ஸி, மதுரை நிறுவனத்தின் விலை விகிதம் ஒன்றுக்கு ரூ.** | **புவேனஸ்வரி எலக்ட்ரிக்கல்ஸ், மதுரை நிறுவனத்தின் விலை விகிதம் ஒன்றுக்கு ரூ.** |
| 1 | மண்வெட்டி | 580/- | 600/- |

| | | | |
|---|---|---|---|
| 2 | பிளாஸ்டிக் சாந்து சட்டி | 250/- | 280/- |
| 3 | தெரு குப்பை வாங்கும் டப்பா | 1450/- | 1500/- |
| 4 | குப்பை அள்ளும் மூங்கில் கூடை | 300/- | 350/- |
| 5 | இரும்பு வாளி | 180/- | 210/- |
| 6 | குப்பை அள்ளும் தகடுகள் | 80/- | 100/- |
| 7 | ஓடைக்கரண்டி | 400/- | 430/- |
| 8 | வெட்டருவாள் | 400/- | 450/- |
| 9 | துாப்புமாறு | 280/- | 300/- |
| 10 | பிரஷ் | 140/- | 170/- |
| 11 | கைமுள் கரண்டி | 240/- | 280/- |
| 12 | ஆட்டரிவாள் | 240/- | 260/- |
| 13 | 1” கடப்பாறை | 650/- | 700/- |

அ) வரப்பெற்ற மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 முதல் 13 வரையுள்ள தளவாட சாமான்களுக்கு குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள பாண்டியன் ஏஜென்ஸி, 788, திருச்சி மெயின் ரோடு, மேலூர், மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு மேற்படி தளவாட சாமான்கள் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகாரத்திற்காக.

ஆ) மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 14.02.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி தளவாட சாமான்கள் வாங்குவதற்கு விநியோக உத்தரவு வழங்கியதற்கும், பட்டியல் தொகை வழங்கியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.565/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 76</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்– 21</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை எண்.101) நாள். 30.04.1997-ல் தெரிவித்துள்ள அளவுகோலின்படி, இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு அனுமதிக்கப்பட வேண்டிய துப்புரவு பணியாளர் பணியிடங்கள் - 304-ல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 100 பணியிடங்களில் பணி ஓய்வு மற்றும் இறப்பின் காரணமாக தற்போது 80 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். எனவே மேற்படி பணியாளர்களை கொண்டு விரிவடைந்து வரும் இந்நகர்ப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள இயலாததால் மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளபடி 204 பணியாளர்களை தனியார் மூலம் (Outsourcing) பெற்று துப்புரவு

பணிகள் மேற்கொள்ள நகரட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 29.01.2018 அன்று பிரேரணை அனுப்பப்பட்டது. அதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு, K.Dis.NO.3939/P3/2018, நாள்.15.02.2018-ல் 204 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் (Outsourcing) பெற்று திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி 204 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் (Outsourcing) பெற்று திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.3.10/-(மூன்று கோடியே பத்து இலட்சத்திற்கும்)-க்கும், விளம்பர செலவினங்களுக்கும் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவுத்தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களிடம் 19.02.2018 அன்று முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.660/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 77</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–22</u>**

கடையநல்லூர் நகராட்சியின் **2018–2019**ம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவு அறிக்கை தயார் செய்யப்பட்டு பார்வைக்கும் அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். /2018/ பி1)**

**<u>தீர்மானம் எண். 78</u>**

பார்வையிட்டு அங்கீகரிக்கப்படுகிறது.

தனி அலுவலர்,
கடையநல்லூர் நகராட்சி.